# TAMILNADU RAJPUT BONDIL ASSOCIATION

**(REG.No. 10 /2019)**

## TNRBA NEWS LETTER - EDITION 13

(Internal Circulation Only)




# TNRBA 2025

## மாநில பொதுக்குழு கூட்டம்,
## குடும்ப விழா பற்றிய தொகுப்பு

இடம்: பவானிஸ் கிராண்ட்பேலஸ், ஓசூர்

நாள்: 27.07.2025




ஆண்டு பொதுக்குழு கூட்டம்




இலவச மருத்துவ முகாம்




இலவச கல்யாண கேந்திரா

# ✍ தலையங்கம்

அன்பு இிராஜ்புத் பொந்தில் சொந்தங்களுக்கு வணக்கம்.

தமிழ்நாடு இிராஜ்புத் பொந்தில் சங்கத்தின் 2025 ஆண்டு மாநில பொதுக்குழு கூட்டம், குடும்ப விழா, இலவச கல்யாண கேந்திரா ஆகியவைகள், 27.07.2025 அன்று ஓசூர், பவானிஸ் கிராண்ட்பேலஸில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த முப்பெரும் விழா நிகழ்ச்சிகளை நேரில் வர இயலாத சொந்தங்கள் அனைவரும் அறிந்துக்கொள்ளும் வகையில் நிகழ்வுகளை தொகுத்து "TNRBA செய்திமடல் - பதிப்பு 13" மின் இதழாக மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்களின் நல்லாசியுடன் வெளியிட்டுள்ளோம்.

50+ ஆண்டுகள் நம் சங்க வரலாற்றில் முதல் முறையாக சங்கத்தின் செயல்பாடுகள் மற்றும் ஆண்டு வரவுசெலவு கணக்குகளை பவர் பாயிண்ட் விளக்கங்கள் (Microsoft Power point Presentation) மூலம் பொதுக்குழுவில் விளக்கினோம்.

எங்கள் முயற்சிகளை செயல்படுத்த தேவையான ஏற்பாடுகள் செய்து கொண்டு ஆதரவையும், ஒத்துழைப்பையும் கொடுத்த திரு.B.பகவான் சிங் அவர்களுக்கு நன்றிகள் சொல்ல கடமை பட்டுள்ளோம்.

நிர்வாகிகளுடைய புகைப்படம் ஏதேனும் தவறுதலாக இந்த தொகுப்பில் இடம்பெறாமல் விட்டு போயிருந்தால் அதனை பொறுத்தளருமாறு மின் இதழ் நிர்வாக குழு சார்பாக அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

TNRBA மாநில - மாவட்ட நிர்வாகிகள் ஆற்றிய உரையினை வீடியோ தொகுப்பாக வாட்ஸப் குழுக்களில் பகிர்ந்துள்ளோம்.

புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் கொடுத்து மின் இதழ் தயாரிப்புக்கு உதவிய  பவானி ஸ்டுடியோஸ் திரு.அர்ஜூன் அவர்களுக்கும், இந்த மின் இதழை தொகுக்க எனக்கு உதவி புரிந்த திருநெல்வேலி திரு.N.பிரேமானந்தா சிங் அவர்களுக்கும் அடிமனதில் இருந்து நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த மின் இதழ் தொகுப்பு பற்றிய உங்கள் கருத்துக்களை தவறாமல் பதிவிடுங்கள். உங்கள் கருத்துகள் இன்னும் பல பொலிவுடன் வருங்காலங்களில் மின் இதழை வெளியிட எங்களை ஊக்கப்படுத்தும்.

அனைவருக்கும் சுதந்திர தின நல்வாழ்த்துகள்

நன்றி, வணக்கம்.



J.பிரகாஷ் சிங்

TNRBA மாநில

பொது செயலாளர்

15.08.2025






# TNRBA 2025 INVITATION



தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கத்தின் மாநில பொது குழு கூட்டம் 27.07.2025 அன்று காலை 9 மணியளவில், ஓசூர் கிராண்ட்பேலஸ் அரங்கில் துவங்கியது.




மாநில தலைவர் வருகை





வரவேற்பு மேஜையில்
ஆர்வமுடன் சொந்தங்கள்
வருகை பதிவேற்றம்





இலவச மருத்துவ முகாமை மாநில தலைவர்
Dr.G.பவானி சிங் அவர்கள்
துவக்கி வைத்து பரிசோதனையும் எடுத்துக் கொண்டார்கள்.



















சுமார் 300 க்கு மேற்பட்ட சொந்தங்கள் இலவச மருத்துவ பரிசோதனை மற்றும் ஆலோசனை பெற்றார்கள்.



## இறை வணக்கம் - நடன பாடல்

மாநில தலைவர் Dr.G.பவானி சிங் - திருமதி.B.விஜயா அவர்களின் பேரனும், திரு.B.பரத்வாஜ் - திருமதி.B.ஜனனி ஆகியோரின் புதல்வனுமாகிய செல்வன்.B. வைபவ் சிங் அவர்கள் பால முருகன் வேடமிட்டு மகளிரணி படைசூட குடும்ப விழாவில் மேடையேறினார்.

மகளிரணியினர் முருகனுக்கு பூ மழை பொழிய கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் திரு.B.இந்தர் சிங் அவர்களின் பேத்தியும், திரு.I.கௌதம் சிங் - திருமதி.G.பிரீத்தா பாய் அவர்களின் புதல்வியுமாகிய செல்வி. ஷர்மிகா ஸ்ரீ அவர்கள் முருகன் பாடலுக்கு நடனமாடினார். முருக பெருமான் இராஜ்புத் பொந்தில் சமுதாய மக்களுக்கு ஆசி வழங்குவது போல அமைந்தது இந்த நாட்டிய நிகழ்ச்சி.


RAJPUT
DIL ASSOCIATION
TRICT 27.07.2025
GATHERING FUNCTION




Reg. No. 10/2019
TAMILNADU RAJPUT
NDIL ASSO
TION
HOSUR
2025




இறை வணக்கம் நடன பாடல்

செல்வன்.B. வைபவ் சிங் – செல்வி.ஷர்மிகா ஸ்ரீ





மகளிரணியினர்
குத்து விளக்கு
ஏற்றிய பின்னர்
தமிழ் தாய்
வாழ்த்துடன்
முறைப்படி பொதுக்
குழு கூட்டம்
துவங்கியது.






## ** புஷ்பாஞ்சலி **

நிர்வாக குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் முக்கிய விருந்தினர்கள் “இராஜா தேசிங் - இராணி பாய் திருவுருவ படத்திற்கு புஷ்பாஞ்சலி” செலுத்திய பின்னர் மேடைக்கு வரவேற்க்கப்பட்டார்கள்.



































உயிர் நீத்த சமுதாய மக்களுக்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி அனுசரிக்கப்பட்டது.





பின்னர் கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் திரு.B.ஜெயக்குமார் சிங் வரவேற்புரை நிகழ்த்தினார்.

# சிறப்பு விருந்தினர்கள் வருகை



விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்ட ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.Y.பிரகாஷ் அவர்களுக்கு மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் சால்வைகள் அணிவித்தும், நினைவு பரிசு கொடுத்தும் கௌரவித்தார்கள்.










ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.Y.பிரகாஷ் அவர்கள் உரையாற்றுகையில்

நாட்டின் வளர்ச்சியில் இராஜபுத்திரர்களின் பங்களிப்பை பாராட்டியதுடன், இராஜ்புத் பொந்தில் சமுதாய மக்களின் கோரிக்கைகள் நிறைவேறுவதற்கு எப்போதும் உறுதுணையாக இருப்பேன் என கூறினார்.





## தலைமையுரை

மாநில கௌரவ தலைவர் பெருந்துறை திரு.V.J.மோகன் சிங் அவர்கள், சமுதாய மக்கள் அனைவரும் லக்ஷ்யா 20L திட்டம் அதன் இலக்கை விரைவில் எட்ட தாராளமாக நன்கொடைகள் வழங்க வேண்டும் என் கேட்டுக்கொண்டார். மேலும் விழாவை சிறப்புடன் நடத்திக் கொண்டிருக்கும் கிருஷ்ணகிரி மாவட்ட கிளைக்கு ₹ 35,000/- மற்றும் லக்ஷ்யா 20L நிதிக்கு ₹ 5,000/- நன்கொடைகள் வழங்கினார்கள்.








## ஆண்டறிக்கை

மாநில பொது செயலாளர் திரு.J.பிரகாஷ் சிங், சங்கத்தின் முக்கிய செயல்பாடுகளை டிஜிட்டல் தொழில்நுட்பம் (POWER POINT PRESENTATION) வாயிலாக விவரித்தார்.

செஞ்சி கோட்டையை உலக புராதான சின்னமாக தேர்வு செய்ய யுனெஸ்கோ அதிகாரிகள் நடத்திய ஆய்வில் மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் தலைமையிலான குழு பங்கு பெற்றதை விளக்கினார்.





விழுப்புரம் மாவட்டத்தின் சார்பாக செஞ்சியை அடுத்த கடலியில் 03.10.2024 அன்று நடைபெற்ற இராஜா தேசிங் 310வது நினைவேந்தல் நிகழ்ச்சியை பற்றி தெரிவித்தார்

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தின் சார்பாக இராணிப்பேட்டையில் 09.10.2024 அன்று மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இராணி பாய் -ன் 310 வது நினைவேந்தல் நிகழ்ச்சி பற்றி விவரித்தார்.



செஞ்சி மன்னன் இராஜா தேசிங் சிலையை அவர் உயிர் நீத்த இடம் அமைந்துள்ள கடலியில் நிறுவ மேற்கொண்ட முயற்சிகள்....

சமுதாய விரோதிகள் ஏற்படுத்திய முட்டுக்கட்டைகள், அடுத்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை POWER POINT  PRESENTATION மூலம்  விளக்கினார்.



பின்னர் செயற்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட 2024 - 2025 ஆம் நிதியாண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட வரவுசெலவு கணக்குகளை வாசித்தார். அதன் விபரங்கள் டிஜிட்டல் திரையிலும் ஒளிபரப்பட்டது. பொதுக்குழுவின் ஒப்புதலையும் பெற்றார்.

மொத்த வருமானம் (**Total Income):** ₹ 9,64,105.00

மொத்த செலவு (**Total Expenditure):** ₹ 8,76,330.53

கையிருப்பு தொகை (**Balance amount):** ₹ 87,774.47

சொந்தங்கள் தெரிந்துக் கொள்ளும் வகையில் இராஜ்புத் பொந்தில் சமுதாய நல அறக்கட்டளையின் 2024 -2025 ஆம் நிதியாண்டின் வரவுசெலவு கணக்குகள், வங்கி முதலீடுகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். இவைகளின் விபரங்கள் (**Excel sheet datas)** திரையிலும் வெளியிடப்பட்டது.

மொத்த வருமானம் (**Total Income):** ₹ **2,95,083.00**


மொத்த செலவு (**Total Expenditure):** ₹ **2,66,413.00**

கையிருப்பு தொகை (**Balance amount):** ₹ **28,670.00**

நிரந்தர வைப்பு நிதியில் முதலீடு செய்வதே முக்கிய செலவாக இருப்பதாக கூறினார்.







DIGITAL PRESENTATION

இதுவரை 10 நிரந்தர வைப்பு நிதி (**FIXED DEPOSIT)** துவக்கியுள்ளதாகவும் அவற்றின் முதலீடு தொகை ₹ 6.50 லட்சம் என குறிப்பிட்டார். இந்த முதலீடுகளின் முதிர்வு தொகை (**MATURITY AMOUNT)** சுமார் ₹ 7.65 லட்சம் வரை இருக்கும் எனவும், இது 35% லக்ஷ்யா 20L இலக்கை எட்டியுள்ளதை குறிப்பதாகவும் கூறினார்.

இறுதியில் பொதுக்குழு தீர்மானங்கள் வாசிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அவைகள்...

# பொதுக்குழு தீர்மானங்கள்

1. இந்த ஆண்டு மறைந்த இராஜ்புத் பொந்தில் இரத்த சொந்தங்களுக்கு பொதுக்குழு தன் ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொள்கிறது.

2. செயற்குழு கூட்டத்தில் புதிதாக தேர்வாகியுள்ள நிர்வாக குழு உறுப்பினர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு பொதுக்குழு ஒப்புதல் அளிப்பதுடன் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

3. செஞ்சி கோட்டையை உலக பாரம்பரிய சின்னமாக அறிவித்த UNESCO அமைப்புக்கும், அதற்கான முயற்ச்சிகளை முன்னெடுத்து சென்ற மத்திய - மாநில தொல்லியல் துறைக்கும், மத்திய - மாநில அரசுகளுக்கும் பொதுக்குழு நன்றிகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

4. இராஜா தேசிங் உயிர் நீத்த இடமான செஞ்சியை அடுத்த கடலி கிராமத்தில் தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கத்தின் சார்பாக நிறுவ பட இருக்கும் இராஜா தேசிங் திருவுருவ சிலைக்கான அனுமதியை விரைவில் வழங்க தமிழ்நாடு அரசை இந்த பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

5. இராணிப்பேட்டை இராஜா தேசிங் - இராணி பாய் நினைவு சின்னங்கள் புனரமைக்கு பின்னர் மேற்கொள்ளப்படும் பராமரிப்புக்கான குழுவில் தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கத்திற்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என தமிழ்நாடு அரசை பொது குழு கேட்டுக் கொள்கிறது.

6. இராணி பாய் நினைவு தினமான அக்டோபர் மாதம் 9ஆம் தேதியை இராணி பேட்டை மாவட்ட நாளாக அறிவிக்க வேண்டும் என தமிழ்நாடு அரசை பொது குழு கேட்டுக் கொள்கிறது.

7. செயற்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட 2024 - 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு கணக்குகளுக்கு பொதுக்குழு ஒப்புதல் அளிக்கின்றது.

8. சங்கத்தின் வளர்ச்சிக்காக நிதி ஆதாரத்தை பெருக்கும் நோக்கில் ஆண்டு சந்தா செலுத்தும் உறுப்பினர்கள் எண்ணிக்கையை மேலும் விரிவாக்க நடவடிக்கை எடுக்க பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

9. கிளைகள் இல்லாத மாவட்டங்களில் புதிய கிளைகளை ஏற்படுத்தவும், சங்கத்தின் செயல்பாடுகளை வேகப்படுத்த மாநில இளைஞரணி மற்றும் மகளிரணி அமைப்பை வலுப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

******

மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் பொது செயலாளர் திரு.J.பிரகாஷ் சிங் அவர்களுக்கு நினைவு பரிசு வழங்கி கௌரவித்தார்கள்.




அதனை தொடர்ந்து மாநில துணை தலைவர்கள், இணை செயலாளர், உதவி செயலாளர், செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், மாநில மகளிரணி அமைப்பாளர், மாநில மகளிரணி அமைப்பு செயலாளர் மற்றும் பலர் பேசினார்கள்.

தலைமை சங்கத்தின் செயல்பாடுகளை பாராட்டி பேசிய அவர்கள், இராஜா தேசிங் சிலையை செஞ்சியில் (கடலி) நிறுவ தலைமை சங்கம் எடுக்கும் முடிவுகளுக்கு உறுதுணையாக இருப்போம் என உறுதி கூறினார்கள்.

# TNRBA மாநில, மாவட்ட நிர்வாகிகள் கருத்துரைகள்

















## TNRBA மாநில தலைவர் சிறப்புரை

தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கத்தின் மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் சிறப்புரை நிகழ்ச்சிகள்.

லக்ஷ்யா 20L திட்டத்தை மாநில பொது செயலாளர் திரு.J.பிரகாஷ் சிங் சிறப்புடன் முன்னெடுத்து செல்வதாகவும், இதுவரை ₹ 7.5 லட்சம் வரை நிரந்தர வைப்பு கணக்கில் சேர்த்திருப்பதாகவும், நம்மால் முடிந்த நன்கொடைகளை மாதாமாதம் அறக்கட்டளை வங்கி கணக்கிற்கு அனுப்பி ₹ 20 லட்சம் இலக்கை விரைவில் அடைய அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்கள்.



சமுதாய பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளை IT படிப்பை மட்டுமே படிக்க ஊக்குவிக்காமல் IAS/ IPS படிக்க வைக்க வேண்டும். ஏனெனில் நமது சமுதாயம் வளர தற்போது அது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது நமது சமுதாயத்தின் சார்பில் ஒருவர் மட்டுமே IPS அதிகாரியாக உள்ளார், குறைந்தது 40 IAS/ IPS அதிகாரிகள் நமது சமுதாயத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும், அந்த இலக்கை அடைய பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை IAS பயிற்ச்சி மையத்தில் சேர்த்து தயார் படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார்கள்.




இராஜா தேசிங் சிலை நிறுவ அனுமதி கோரி ஏழு துறைகளுக்கு கடிதம் எழுதி, இறுதியாக தற்போது விழுப்புரம் மாவட்ட ஆட்சரியரின் பார்வைக்கு கோரிக்கை மனு வந்துள்ளதாக தெரிவித்தார்கள்.

மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் "ஊழல் குணம் படைத்தோர்" மற்றும் "இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்" மனநிலை உள்ளவர்கள் பற்றி இரு சிறு கதைகள் மூலம் விவரித்து அரங்கம் குலுங்க கைதட்டல் பெற்றார்கள்.





இறுதியாக வருடந்தோறும் சிறப்பாக நடைபெற்று வரும் சமுதாய விழாக்களில் இன்னும் அதிக எண்ணிக்கையில் சொந்தங்கள் கலந்துக்கொண்டு நமது ஒற்றுமையையும், ஒருங்கிணைப்பையும் மேலும் அதிகரிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டு சிறப்புரையை நிறைவு செய்தார்கள்.



## TNRBA மாநில, மாவட்ட நிர்வாகிகள் கருத்துரைகள்



















TNRBA மாநில - மாவட்ட நிர்வாகிகளை மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்.



திரு.K.விஜயகுமார் சிங்
மாநில துனை தலைவர்
சென்னை



திரு.V.சுரேஷ் பாபு சிங்
மாநில துனை தலைவர்
கோயம்புத்தூர்



திரு.K.பிரேம் சிங்
மாநில துனை தலைவர்
வேலூர்



திரு.B.கஜேந்திர சிங்
மாநில துணை தலைவர்
ஓசூர்

**TNRBA** மாநில - மாவட்ட நிர்வாகிகளை **மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள்** நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்.





**திரு.R.குலாப் சிங்**
மாநில இணை செயலாளர்
மாவட்ட தலைவர்,
திருப்பூர்

**திரு.E.ராஜேந்தர் சிங்**
மாநில உதவி செயலாளர்,
மாவட்ட தலைவர்,
வட சென்னை





**திரு.K.பாலாஜி சிங்**
மாநில பொருளாளர்
சென்னை

**திரு.L.ரகுநாத் சிங்**
மாநில செயற்குழு உறுப்பினர்
தருமபுரி

TNRBA மாநில - மாவட்ட நிர்வாகிகளை மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்



திரு.N.பிரேமானந்தா சிங்
மாவட்ட தலைவர்,
மாநில செயற்குழு உறுப்பினர்
திருநெல்வேலி



திரு.V.ரவிசந்தர் சிங்
மாவட்ட தலைவர்,
மாநில செயற்குழு உறுப்பினர்
புதுக்கோட்டை



திரு.N.மகேந்திரநாத் சிங்
மாவட்ட செயலாளர்
மாநில செயற்குழு உறுப்பினர்
தென் சென்னை



Dr.R.லட்சுமணன் சிங்
மாவட்ட தலைவர்,
மாநில செயற்குழு உறுப்பினர்
கரூர்

TNRBA மாநில - மாவட்ட நிர்வாகிகளை மாநில தலைவர் **Dr.G.பவானி சிங் அவர்கள்** நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்.



**திரு.E.ஹரி சிங்**
மாநில செயற்குழு உறுப்பினர்
திருத்தணி



**திரு.T.பாலாஜி சிங்**
மாவட்ட தலைவர்,
மாநில செயற்குழு உறுப்பினர்
ஓசூர்



**திரு.N.மணிராம் சிங்**
மாநில செயற்குழு உறுப்பினர்
வாலாஜாபேட்



**திரு.N.மேரு சிங்**
மாநில செயற்குழு உறுப்பினர்
வேலூர்

TNRBA மாநில - மாவட்ட நிர்வாகிகளை மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்.



திரு.M.R.ரவிச்சந்திரன் சிங்
மாவட்ட தலைவர்,
மாநில செயற்குழு உறுப்பினர்
விழுப்புரம்



திரு.J.கோபிநாத் சிங்
மாவட்ட பொருளாளர்
மாநில செயற்குழு உறுப்பினர்
பெருந்துறை, ஈரோடு



திரு.H.மோகன் சிங்
மாவட்ட செயலாளர்
மாநில செயற்குழு உறுப்பினர்
கோயம்புத்தூர்



திரு.G.தேவேந்திர சிங்
மாவட்ட தலைவர்,
மாநில செயற்குழு உறுப்பினர்
வேலூர்

TNRBA மாநில - மாவட்ட நிர்வாகிகளை மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்.



திரு.R.கங்காதர திலக் சிங்
திருநெல்வேலி மாவட்ட
செயலாளர்



திரு.D.சதீஷ் சிங்
கோவை மாவட்ட செயலாளர்
கோயம்புத்தூர்



திரு.A.சந்தர் சிங்
திருப்பூர் மாவட்ட செயலாளர்
திருப்பூர்




திரு.R.கஜேந்திர சிங்
ஈரோடு மாவட்ட செயலாளர்
ஈரோடு

**TNRBA** மாநில - மாவட்ட நிர்வாகிகளை மாநில தலைவர் **Dr.G.**பவானி சிங் அவர்கள் நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்.



திரு.**N.**மஞ்சுநாத் சிங்
தென் சென்னை மாவட்ட
தலைவர்



திரு.**T.**ஜெயராம் சிங்
திருச்சி மாவட்ட தலைவர்
திருச்சி



திரு.**K.**ஜெயராம் சிங்
தருமபுரி மாவட்ட தலைவர்
தருமபுரி



திரு.**R.**லோக்மான் சிங்
கள்ளக்குறிச்சி மாவட்ட
செயலாளர்

TNRBA மாநில இளைஞரணி நிர்வாகிகளை மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்.



திரு.R.சாய்பகவான் சிங்
மாநில அமைப்பாளர்
மாநில செயற்குழு உறுப்பினர்
ஓசூர்



திரு.R.கார்த்திக் சிங்
மாநில அமைப்பு செயலாளர்
மாநில செயற்குழு உறுப்பினர்
திருச்சி



திரு.M.ரவீந்திரநாத் சிங்
மாநில துணை அமைப்பாளர்
வாலாஜாபேட்



திரு.M.அசோக் குமார் சிங்
மாநில உதவி செயலாளர்
ஓசூர்

# குழந்தை சாதனையாளருக்கு பாராட்டு

ஓசூரை சேர்ந்த திரு.பாலாஜி சிங் - திருமதி.சக்தி சாந்தினி தம்பதியினரின் ஆறு மாத பெண் குழந்தை பேபி B.தீதி சிங் (Baby B.Didhi Singh) நூற்றுக்கு மேற்பட்ட ஃபிளாஷ் கார்டுகளை அடையாளம் காணும் அசாதாரண திறமையை பெற்றுள்ளார். அவருடைய பெயர் சர்வதேச சாதனை புத்தகத்தில் திறமையான குழந்தை பிரிவில் இடம் பெற தேர்வாகியுள்ளது. (International Book of Records - Super Talended Kid)

பேபி B.தீதி சிங் அவர்களையும், பெற்றோர்களையும், TNRBA மாநில தலைவர் Dr.G.பவானி சிங் மேடையில் பாராட்டி, நினைவு பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கி கௌரவித்தார்கள்.



தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் தலைமை சங்கம் பேபி B.தீதி சிங் அவர்களின் பெயர் சர்வதேச சாதனை புத்தகத்தில் விரைவில் இடம் பெற வேண்டும் என வாழ்த்துவதுடன், குழந்தை மேன்மேலும் பற்பல சாதனைகளை புரிந்து பெற்றோருக்கும், நம் சமுதாயத்துக்கும் பெயரையும் புகழையும் பெற்றுதர வேண்டும் எனவும் வாழ்த்துகிறோம்.











## ஆசிரியர் பணி நிறைவுக்கு பாராட்டு

சென்னை, கொளத்தூரில் வசிக்கும் திருமதி.B.பத்மாவதி பாய், M.Sc.,B.Ed., முதுகலை ஆசிரியர் அவர்கள், அண்ணா நகர் பாரத ஸ்டேட் வங்கி அதிகாரிகள் சங்க மெட்ரிக் உயர்நிலை பள்ளி (SBIOA Matric Higher Secondary School) ஆசிரியர் பணியிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றார். அவருடைய 35 வருட ஆசிரியர் பணியினை பாராட்டி அவரிடம் மாணவியராய் பயின்ற TNRBA மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்களின் இளைய மருமகள் திருமதி.B.ஜனனி பரத்ராஜ் சிங் அவர்கள் குடும்ப விழா மேடையில் அவருக்கு சால்வைகள் அணிவித்து, நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள். திருமதி.B.பத்மாவதி பாய் அவர்கள் உரையாற்றுகையில் தமிழ்நாடு இராஜ்புத் சங்கத்தின் சேவைகளை வெகுவாக பாராட்டி பேசினார்கள். குடும்ப விழாவை சிறப்புடன் நடத்தி வரும் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ₹ 2000/- நன்கொடையினை மாநில தலைவரிடம் வழங்கினார்கள்.


DU RAJPU


ASSOCIATION

# துப்பாக்கி சூடும் சாதனையாளருக்கு பாராட்டு









தருமபுரி மாவட்டம் வேதகரத்தை சேர்ந்த திரு.A.சமன் சிங் (எ) அசோக் சிங் - R.ஜெயலக்ஷ்மி ஆகியோரின் மகன் செல்வன்.S.சேத்தன் கணேஷ் சிங் அவர்கள்,

தமிழ்நாடு துப்பாக்கி சூடும் சங்கத்தின் சார்பில் (**Airgun Shooting Association**) 13.04.2025 சேலத்தில் நடைபெற்ற மாநில அளவிலான துப்பாக்கிச் சூடும் போட்டியில் பங்கேற்று முதல் பரிசை பெற்றுள்ளார். அவரது திறமையை பாராட்டி **TNRBA** மாநில தலைவர் **Dr.G.**பவானி சிங் அவர்கள் அவருக்கு நினைவு பரிசு வழங்கி கௌரவபடுத்தினார்கள்.

# சிலம்பம் சாதனையாளருக்கு பாராட்டு



கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரை சேர்ந்த திரு.பிரசாந்த் சிங் - திருமதி.கவிதா பாய் ஆகியோரின் மகன்,
செல்வன் ரோகன் ஃப்ரிஜித் சிங் அவர்கள்,

13.07.2025 அன்று கிருஷ்ணகிரி மாவட்ட சிலம்பம் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற 8வது மாவட்ட அளவிலான சிலம்பம் 2025 (சிறுவர் - சிறுமியர்) போட்டியில் கலந்து கொண்டு வெள்ளி பதக்கம் பெற்றுள்ளார்.

அவரது திறமையை பாராட்டி TNRBA மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் நினைவு பரிசு வழங்கி கௌரவபடுத்தினார்.

# சமுதாய வளர்ச்சிக்கு தருமபுரியின் பங்களிப்பு




திரு.K.கிருஷ்ணா சிங் (Retd VAO), வேதகரம், பனந்தூர், மாநில செயற்குழு உறுப்பினர் திரு.L.ரகுநாத் சிங், தருமபுரி மாவட்ட தலைவர் திரு.K.ஜெயராம் சிங், மாநில மகளிரணி அமைப்பாளர் திருமதி.D.ருக்மணி பாய், தருமபுரி மாவட்ட பொருளாளரும், சங்கத்தின் ஆடிட்டருமான திரு.A.சஞ்சய் ஆகியோர், TNRBA தருமபுரி மாவட்டத்தின் சார்பாக விழாவை சிறப்புடன் நடத்திக்கொண்டிருக்கும் கிருஷ்ணகிரி மாவட்ட கிளைக்கு **₹ 10,000/-,** நன்கொடையும்,

தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சமுதாய நல அறக்கட்டளையின் லக்ஷ்யா 20L நிதிக்கு ₹ 5,000/- நன்கொடையும் மாநில தலைவர் **Dr.G.**பவானி சிங் அவர்களிடமும், மாநில பொது செயலாளர் திரு.**J.**பிரகாஷ் சிங் அவர்களிடம் வழங்கினார்கள்.

# ஊடக துறையினர் கௌரவிப்பு









TNRBA 2025 பொதுக்குழு கூட்டம், குடும்ப விழா நிகழ்வுகளின் தகவல்கள் சேகரிக்க வந்த பல்வேறு முதன்மை ஊடக துறை நண்பர்கள் மாநில தலைவரால் கௌரவிக்கப்பட்டார்கள்.

## ராஜா தேசிங்கு சிலை நிறுவ அரசுக்கு கோரிக்கை

**ஒசூர், ஜூலை 28**

ஒசூரில் தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்க மாநில செயற்குழு, பொதுக்குழு கூட்டம் மற்றும் குடும்ப விழா நேற்று நடந்தது. மாவட்ட தலைவர் இந்தர் சிங் தலைமை வகித்தார். மாநில தலைவர் பவானி சிங் முன்னிலை வகித்து, 10 மற்றும் பிளஸ் 2 பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியருக்கு உதவித்தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். ஒசூர், தி.மு.க., – எம்.எல்.ஏ., பிரகாஷ் பேசினார்.

கூட்டத்தில், விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் கட்டப்பட்டுள்ள தேசிங்கு ராஜன் கோவிலின் உள்ளே தயார் நிலையிலுள்ள ராஜா தேசிங்கு உருவ சிலையை நிறுவ, தமிழக அரசு விரைவில் அனுமதி வழங்க வேண்டும். ராணிப்பேட்டையில் நடந்து வரும், ராஜா தேசிங், ராணி பாய் நினைவு சின்னங்களின் புனரமைப்புக்கு பின் மேற்கொள்ளப்படும் பராமரிப்பு குழுவில், தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்கத்திற்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என, தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. தொடர்ந்து, இலவச மருத்துவ முகாம் மற்றும் வரன் பார்க்கும் இலவச கல்யாண கேந்திரா நிகழ்ச்சி நடந்தது.

மாலை மலர்
இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்
MAALAI MALAR



விழாவில், பிரகாஷ் எம்.எல்.ஏ-விற்கு, சங்கத்தின் மாநில தலைவர் பவானி சிங், நினைவுப்பரிசு வழங்கிய போது எடுத்த படம்.

ஓசூரில்

## ராஜ்புத் பொந்தில் சங்க குடும்ப விழா

### பிரகாஷ் எம்.எல்.ஏ பங்கேற்பு

ஓசூர், ஜூலை.28—

ஓசூரில், தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்கத்தின் மாநில செயற்குழு, பொதுக்குழு கூட்டம் மற்றும் குடும்ப விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிகளுக்கு, மாவட்ட தலைவர் இந்தர் சிங் தலைமை தாங்கினார். மாநில தலைவர் பவானி சிங் முன்னிலை வகித்து 10, 12-ம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு உதவித்தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி பேசினார்.

விழாவில், சிறப்பு அழைப்பாளர்களாக, ஒய். பிரகாஷ் எம்எல்ஏ, மேற்கு மாவட்ட பாஜக முன்னாள் தலைவர் நாகராஜ் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

முன்னதாக நடந்த செயற்குழு கூட்டத்தில், செஞ்சி கோட்டையை, பாரம்பரிய சின்னமாக அறிவித்த யுனெஸ்கோ அமைப்புக்கும், முயற்சிகள் முன்னெடுத்த மத்திய, மாநில அரசுகள் மற்றும் தொல்லியல் துறைக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை கட்டாட்சி செய்த தேசிங்கு ராஜன் கோவிலின் உள்ளே தனியார் நிலையில் உள்ள ராஜா தேசிங் உருவச்சிலையை திருவுருவத்திற்கு தமிழ்நாடு அரசு விரைவில் அனுமதி வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இதில், மாநில பொது செயலாளர் பிரகாஷ் சிங், துணைத் தலைவர்கள் விஜயகுமார் சிங், சுரேஷ் பாபு, பிரேம் சிங், ஜிதேந்திர சிங், பொருளாளர் பாலாஜி சிங் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவையொட்டி, இலவச மருத்துவ முகாம் மற்றும் வரன் அமைத்து கொடுக்கும் இலவச கல்யாண கேந்திரா நிகழ்ச்சி நடைபெற்றது.



ஒசூர் ராஜ்புத் பொந்தில் சங்க மாநில செயற்குழு கூட்டத்தில், மேயர் சத்யா மற்றும் மாநில தலைவர் பவானிசிங் ஆகியோர் மாணவ, மாணவிகளுக்கு உதவித்தொகை மற்றும் சான்றிதழ் வழங்கினர்.

## ஓசூரில் பொதுக்குழு கூட்டம்

ஓசூர், ஜூலை 28-

ஒசூர் மாநகராட்சி நஞ்சுண்டேஸ்வர் நகர் ரிங் ரோட்டிலுள்ள பவானி பேலஸில், தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்க மாநில செயற்குழு, பொதுக்குழு கூட்டம் நடந்தது. கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் இந்தர் சிங் தலைமை வகித்தார். மாநில தலைவர் டாக்டர் பவானிசிங் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் இலவச மருத்துவ முகாம் நடந்தது.

இதை தொடர்ந்து நடந்த கூட்டத்தில் ஒசூர் மாநகராட்சி மேயர் சத்யா, மாநில தலைவர் பவானி சிங் ஆகியோர் பங்கேற்று 10 மற்றும் 12ம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு உதவித்தொகை மற்றும் சான்றிதழ் வழங்கினர்.

ராணிப்பேட்டையில் நடந்துவரும் ராஜா தேசிங் ராணிபாய் நினைவு சின்னங்கள் புனரமைப்பிற்கு பின்னர் மேற்கொள்ளப்படும் பராமரிப்பு குழுவில், தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்கத்துக்கு உரிய பிரதிநிதித்துவம் தமிழக அரசு வழங்க வேண்டும்.

செஞ்சி கோட்டையை உலக பாரம்பரிய சின்னமாக அறிவித்த யுனெஸ்கோ அமைப்பு மற்றும் முயற்சி மேற்கொண்ட மத்திய, மாநில அரசுகள், தொல்லியல் துறைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. பொதுச்செயலாளர் பிரகாஷ் சிங், துணைத்தலைவர்கள் விஜயகுமார், சுரேஷ் பாபு, கஜேந்திர சிங், பிரேம் சிங், ஜிதேந்திர சிங், பொருளாளர் பாலாஜி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தினத் தந்தி

## ராஜ்புத் சங்க செயற்குழு கூட்டம்



ஓசூரில், தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்கத்தின்

## மாநில செயற்குழு, பொதுக்குழு கூட்டம் மற்றும் குடும்ப விழா,



NEWS UPDATE

TNRBA குடும்ப விழா பற்றிய செய்திகள் பல்வேறு நாளிதழ்களில் வெளி வந்தது

தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்ட தினசரி டிஜிட்டல் நாளிதழ்

பக்கம் - 7
28.07.2025

# ஒசூரில் தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கத்தின் மாநில செயற்குழு, பொதுக்குழு கூட்டம் மற்றும் குடும்ப விழா



ஒசூரில் தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கத்தின் மாநில செயற்குழு, பொதுக்குழு கூட்டம் மற்றும் குடும்ப விழா கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கத்தின் சார்பில் மாநில செயற்குழு, மற்றும் குடும்ப விழா மாநில தலைவர் டாக்டர்.பவானி சிங் தலைமையில் நடைபெற்றது . இவ்விழாவில் கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் இந்தர் சிங் தலைமை வகித்தார் . கூட்டத்தில் வரன் அமைத்து கொடுக்கும் இலவச கல்யாண கேந்திரா, மற்றும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது இதைத்தொடர்ந்து 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொது தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றமாணவ, மாணவியருக்கு உதவித்தொகை மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டன கூட்டத்தில் ஒசூர் மாநகர மேயர் சத்யா பேசுகையில் செஞ்சி கோட்டையை உலக பாரம்பரிய சின்னமாக அறிவித்த யுனெஸ்கோ அமைப்புக்கும், முயற்சிகள் முன்னெடுத்த மத்திய மாநில அரசுகள் மற்றும் தொல்லியல் துறைக்கும் நன்றிகள் தெரிவித்தார் இவ்விழாவில் மாநில பொது செயலாளர் பிரகாஷ் சிங், துணைத் தலைவர்கள் விஜயகுமார் சிங், சுரேஷ் பாபு, பிரேம் சிங், கஜேந்திர சிங், பொருளாளர் பாலாஜி சிங் உட்பட பலர் கலந்து கொண்டனர் .

# போர் முரசு

புதிய

தினசரி காலை நாளிதழ்

## ஒசூரில் தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கத்தின் மாநில செயற்குழு, பொதுக்குழு கூட்டம் மற்றும் குடும்ப விழா...!



# సాక్షి

...శ్రమాలు చేపట్టాలని సూచించారు. వెంకటాచలపతి శెట్టి పాల్గొన్నారు.

## ఉత్తీర్ణులకు సన్మానం

హోసూరు: హోసూరులో రాజ్‌పుత్ సేవా సంస్థ పది, ప్లస్టూలో ఎక్కువ మార్కులతో పాసైన తమ వర్గం విద్యార్థులను సన్మానించింది. సంఘ రాష్ట్ర అధ్యక్షుడు భవానీసింగ్ అధ్యక్షత వహించాడు. ముఖ్య అతిథిగా మేయర్ ఎస్.ఏ.సత్య పాల్గొని మాట్లాడుతూ రాజ్‌పుత్ సేవా సంస్థ సేవలు అభినందనీయమన్నారు. తరచూ ఉచిత వైద్య శిబిరాలు నిర్వహించి ప్రజలకు సేవలందజేస్తున్నారని, ప్రజలకు మరిన్ని సేవలందజేయాలని సూచించారు. ప్రకాష్‌సింగ్, విజయ్‌కుమార్ సింగ్, సురేష్‌బాబు, ప్రేమ్‌సింగ్, గజేంద్రసింగ్ పాల్గొన్నారు.

NEWS UPDATE

TNRBA 2025 .குடும்ப விழா பற்றிய செய்திகள் பல்வேறு நாளிதழ்களில் வெளி வந்தது








குடும்ப விழாவில் வேத முழக்கம்...

இராஜ்புத் பொந்தில் சொந்தங்கள் எல்லா வளமும் பெற்று நலமுடன் வாழ வேண்டி, விழா மேடையில் பண்டிதர் வேத மந்திரங்கள் ஓதி சொந்தங்களை ஆசிர்வதித்தார். மாநில தலைவர் **Dr.G.பவானி சிங்** அவர்கள், பண்டிதருக்கு சால்வை அணிவித்து, நினைவு பரிசு வழங்கினார்கள்.

# சமுதாய வளர்ச்சிக்கு திருப்பூரின் பங்களிப்பு



TNRBA திருப்பூர் மாவட்ட தலைவர், மாநில செயற்குழு உறுப்பினர் திரு.R.குலாப் சிங், மாவட்ட செயலாளர் திரு.A.சந்தர் சிங், மாவட்ட பொருளாளர் திரு.D.ரவீந்தர் சிங், மாவட்ட இணை செயலாளர் திரு.P.அமர்நாத் சிங் ஆகியோர்,

TNRBA திருப்பூர் மாவட்டத்தின் சார்பாக தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சமுதாய நல அறக்கட்டளையின் "லக்ஷ்யா 20L" நிதிக்கு ₹ 10,000/- நன்கொடையினை மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்களிடமும், மாநில பொது செயலாளர் திரு.J.பிரகாஷ் சிங் அவர்களிடம் வழங்கினார்கள்.

# சமுதாய வளர்ச்சிக்கு கோவையின் பங்களிப்பு




TNRBA கோவை மாவட்ட தலைவர் திரு.V.சுரேஷ் பாபு சிங், மாவட்ட இணை செயலாளர் திரு.D.சதீஷ் சிங், துணை பொருளாளர் திரு.ராஜீ விக்ரம், மாநில மகளிரணி ஒருங்கிணைப்பாளர் திருமதி.கீதா ஆகியோர், TNRBA கோவை மாவட்டத்தின் சார்பாக, விழாவை சிறப்புடன் நடத்திக் கொண்டிருக்கும் கிருஷ்ணகிரி மாவட்ட கிளைக்கு ₹ 10,000/- நன்கொயினை மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்களிடம் வழங்கினார்கள்.

மேற்படிப்பிற்காக லண்டன் செல்லவுள்ள கோவை ஒண்டிபுதூர் திருமதி.பன்சி பாய் - அமர் சிங் அவர்களின் அன்பு செல்வி.A.ஸ்ரீநிதி சார்பாகவும் ₹ 2,000/- நன்கொடை மாநில தலைவரிடம் வழங்கப்பட்டது.

# TNRBA 2025 கல்வி விருதுகள்








12 ஆம் வகுப்பு பொது தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற, துடிப்புடன் சங்க செயல்பாடுகளில் ஈடுபட்டு மறைந்த ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த நிர்வாகி திரு.T.பகவத் சிங் - திருமதி.R.சுமதி பாய் அவர்களின் புதல்வி

செல்வி.S.B.ஸ்வேதா சிங் அவர்கள்,

நினைவு கோப்பை, சான்றிதழ் மற்றும் ஊக்க தொகையினை மாநில மூத்த நிர்வாகிகளிடமிருந்து பெறுகிறார்.

## சிறப்பு விருந்தினர்கள் வருகை

மரியாதைக்குரிய ஓசூர் மேயர் திரு.M.A.சத்யா அவர்கள் நம் அழைப்பையேற்று குடும்ப விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்கள். இராஜா தேசிங் - இராணி பாய் திருவுருவ படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்திய பின்பு சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

தனக்கும் நம் மாநில தலைவருக்குமுள்ள ஆழ்ந்த நட்பை பற்றி குறிப்பிட்டார்கள். Dr.G.பவானி சிங் அவர்கள் ஆற்றி வரும் சமுதாய சேவைகளை குறிப்பிட்டார்கள். இராஜா தேசிங் -ன் திருவுருவ சிலை நிறுவிட தன்னால் முடிந்த உதவிகளை செய்வதாக உறுதி அளித்தார்கள்.

மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள்
மேயர் திரு.M.A.சத்யா அவர்களுக்கு சால்வைகள் அணிவித்து நினைவு பரிசுகள் வழங்கினார்கள்.




TAMILNADU RAJPUT BONDIL ASSOCIATION
KRISHNAGIRI DISTRICT
TAMILNADU RAJPUT BONDIL
ASSOCIATION


HOSUR














மேயர்
திரு.M.A.சத்யா
அவர்கள்
பத்தாம் வகுப்பு,
பன்னிரெண்டாம்
வகுப்பு பொது தேர்வில்
அதிக மதிப்பெண்கள்
பெற்ற மாணவ -
மாணவியருக்கு
தமிழ்நாடு இராஜ்புத்
பொந்தில் சங்கத்தின்
சார்பில் ஊக்க தொகை,
சான்றிதழ் மற்றும்
நினைவு பரிசுகள்
வழங்கி
வாழ்த்தினார்கள்.









## TNRBA 2025

## கல்வி விருதுகள்

SSLC (10th), HSE (+2)
பொது தேர்வுகளை
Metric, CBSE, ICSE
பாடதிட்டத்தில் பயின்று
அதிக மதிப்பெண்கள்
எடுத்த மாணவ -
மாணவியருக்கு
நினைவு பரிசு, சான்றிதழ்
மற்றும் ஊக்க தொகை
அறக்கட்டளையின்
சார்பாக வழங்கப்பட்டது.

# சமுதாய வளர்ச்சிக்கான தொடர் பங்களிப்பிற்கு பாராட்டுதல்கள்

தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சமுதாய நல அறக்கட்டளையின் வளர்ச்சிக்காக துவக்கப்பட்ட "லக்ஷ்யா 20L" திட்டத்திற்காக அறக்கட்டளையின் ICICI வங்கி கணக்கிற்கு மாதா மாதம் தவறாமல் நன்கொடைகள் வழங்கி வரும் உறுப்பினர்களுக்கு அறக்கட்டளையின் சார்பாக பாராட்டு சான்றிதழ்களும், நினைவு பரிசும் வழங்கப்பட்டது.



திரு.V.J.மோகன் சிங்,
மாநில கௌரவ
தலைவர்
பெருந்துறை



Dr.G.பவானி சிங்,
மாநில தலைவர்
ஓசூர்



திரு.K விஜயகுமார் சிங்,
மாநில துணை தலைவர்,
சென்னை



திரு.J.பிரகாஷ் சிங்,
மாநில பொதுசெயலாளர்,
சென்னை



திரு.K.பாலாஜி சிங்
மாநில பொருளாளர்,
சென்னை



திருமதி.D.ருக்மணி பாய்,
மாநில மகளிரணி
அமைப்பாளர், தருமபுரி



திரு.T.ஹரிநாத் சிங்,
(S.Rly), தாம்பரம்,
சென்னை



திரு.B.மகேந்திர சிங்,
ஈரோடு மாவட்ட செயலாளர்,
கோபிசெட்டிபாளயம்

# சமுதாய வளர்ச்சிக்கான தொடர் பங்களிப்பிற்கு பாராட்டுதல்கள்
















தவிர்க்க இயலாத காரணங்களால் பாராட்டு சான்றிதழை நேரில் பெற முடியாத நன்கொடையாளர்களுக்கு அறக்கட்டளை சார்பாக பாராட்டுதல்கள் தெரிவித்து கொள்கிறோம்.








சிறப்பு விருந்தினர்கள் வருகை...

TNRBA குடும்ப விழாவில் ஓசூர் மேற்கு மாவட்ட பா.ஜா.க முன்னாள் தலைவர் திரு.நாகராஜ் அவர்கள் கலந்துக் கொண்டு சிறப்பித்தார்கள்.அவருக்கு மாநில தலைவர் சால்வை அணிவித்து, நினைவு பரிசு அளித்து கௌரவித்தார்கள்.

**TNRBA** கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகிகளை மாநில தலைவர் **Dr.G.**பவானி சிங் அவர்கள் நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்.





























கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகிகளை மாநில தலைவர் **Dr.G.பவானி சிங்** அவர்களிடம் நினைவு பரிசு பெறுகிறார்கள்

TNRBA கிருஷ்ணகிரி மாவட்ட மகளிரணி நிர்வாகிகளுக்கு மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்.


















TNRBA கிருஷ்ணகிரி மாவட்ட மகளிரணி நிர்வாகிகளுக்கு மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்.













TNRBA கிருஷ்ணகிரி மாவட்ட மகளிரணி நிர்வாகிகளுக்கு மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்.













TNRBA மாநில மகளிரணி நிர்வாகிகளை மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்.



திருமதி.D.ருக்மணி பாய்,
மாநில அமைப்பாளர்,
மாநில செயற்குழு உறுப்பினர்
தருமபுரி



திருமதி.A.அபிராமி பாய்
அமைப்பு செயலாளர்,
மாநில செயற்குழு உறுப்பினர்
ஓசூர்



திருமதி.A.காஞ்சனா பாய்
துணை அமைப்பாளர்,
புதுக்கோட்டை



திருமதி.R.வசந்தி பாய்
துணை அமைப்பாளர்,
வாலாஜாபேட்

TNRBA மாநில மகளிரணி நிர்வாகிகளை மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்.



திருமதி.லக்ஷ்மா சங்கர்
மாவட்ட ஒருங்கிணைப்பாளர்
அந்தியூர், ஈரோடு



திருமதி.G.பானு பாய்
மாவட்ட ஒருங்கிணைப்பாளர்
திருநெல்வேலி



திருமதி.J.ஷகிலா பாய்
மாவட்ட ஒருங்கிணைப்பாளர்
திருச்சி



திருமதி.கீதா பாய்
மாவட்ட ஒருங்கிணைப்பாளர்
கோயம்புத்தூர்










புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட
தென் சென்னை மாவட்ட
நிர்வாகிகள்
மாநில தலைவர்
Dr.G.பவானி சிங் அவர்களிடம்
வாழ்த்து பெற்றார்கள்.




விழா நிகழ்ச்சிகளை சிறப்புடன் தொகுத்து வழங்கிய
திரு.R.கார்த்திக் சிங் – திரு.B.ஜெய்குமார் சிங் ஆகியோர்
பாராட்டுதலுடன் நினைவு பரிசும் பெறுகிறார்கள்.









மதியம் 1.30 மணியளவில் மதிய உணவு இடைவேளை துவங்கியது. சுமார் 1800 க்கு மேற்பட்ட சொந்தங்கள் நாவிற்கினிய அறுசுவை உணவை உண்டு மகிழ்ந்தார்கள்.









மதிய உணவு இடைவேளையின் போது சொந்தங்கள் நாவிற்கினிய அறுசுவை உணவை உண்டு மகிழ்ந்தார்கள்.









# இலவச கல்யாண கேந்திரா

பொதுக்குழு கூட்டம் நிறைவு பெற்றதை தொடர்ந்து மதியம் 2 மணியளவில் இலவச கல்யாண கேந்திரா நிகழ்ச்சி வெளி அரங்கத்தில் துவங்கியது. மாநில செயற்குழு உறுப்பினர்கள் திரு.V.ரவிசந்தர் சிங், திரு.B.கஜேந்திர சிங் ஆகியோர் இதர தன்னால்வர்களுடன் வரன் பதிவு செய்வதற்கு உதவி செய்தார்கள்.












வரன் தேடும் சொந்தங்கள் ஆர்வமுடன் வரன்களை **TNRBA** திருமண வரன் சேவை மையத்தில் இலவசமாக பதிவு செய்தார்கள்.

பதிவு செய்யப்பட்ட வரன்கள்:

மணமகன்: 88 மணமகள்: 22




வரன்களை அறிமுகப்படுத்தும் புது முயற்ச்சி இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.



மகளிரணி
நிர்வாகிகள்
மணமகளை
(நடுவில் இருப்பவர்)
அறிமுகம்
செய்தார்கள்.

கல்யாண கேந்திராவில்
பதிவு செய்யப்பட்ட
மணமகளின்
விபரங்களை
திரு.V.ரவிசந்தர் சிங்
அவர்கள் மேடையில்
அறிவித்தார்கள்






ஓசூரில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் இலவச கல்யாண கேந்திரா நிகழ்வுகளின் போதும், வரன் பதிவு செய்ய வருபவர்களுக்கு, விண்ணப்பங்கள் கொடுத்து, பதிவு செய்ய உதவி செய்தும். வரன் பதிவுகள் முடிந்ததும் அதனை மணமகன், மணமகள் என தனியாக வரிசை படுத்தி அவைகளை கோப்பில் வைத்து ஒப்படைக்கும் பணிகளை சிறப்புடன் செய்து வரும்

பவானி சுசுகி ஊழியர் திருமதி.ஸ்ரீவித்யா மற்றும் திருமதி.சசிகலா ஆகியோருக்கு
மாநில தலைவர் **Dr.G.**பவானி சிங் அவர்கள் நினைவு பரிசு வழங்கி கௌரவித்தார்கள்.

# கலை நிகழ்ச்சிகள்

பொதுக்குழு கூட்டம் நிறைவு பெற்றதை தொடர்ந்து
மதியம் 2 மணியளவில் மகளிரணி சார்பில்
கலை நிகழ்ச்சிகள் துவங்கியது.
























ஜோடிகள் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு 1st, 2nd, 3rd பரிசுகளை மாநில பொருளாளர் திரு.K.பாலாஜி சிங் அவர்களும் மகளிர் அணி அமைப்பாளர் திருமதி.D.ருக்மணி பாய் அவர்களும் வழங்கினார்கள்.










மகளிருக்கான போட்டியில் வெற்றி பெற்றோருக்கு முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளை மாநில மகளிரணி அமைப்பாளர் திருமதி.D.ருக்மணி பாய் அவர்கள் வழங்கினார்கள்.

5,6,7 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றோருக்கு முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளை திருமதி.R.விஜயலக்ஷ்மி மற்றும் திருமதி.J.சகிலா ஆகியோர் வழங்கினார்கள்.







LKG, UKG குழந்தைகளுக்கான போட்டியில் வெற்றி பெற்றோருக்கு முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளை திருமதி.A.காஞ்சனா பாய், அவர்கள் வழங்கினார்கள்.






LKG, UKG, முதலாம் வகுப்பு குழந்தைகளுக்கான ஆன்லைன் டிராயிங் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளை வென்றோருக்கு திருமதி.ஜெயலல்லி அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள்.




போட்டியில் கலந்து கொண்ட அனைத்து குழந்தைகளுக்கும் மாநில மகளிரணி அமைப்பாளர் திருமதி.D.ருக்மணி பாய், அவர்கள் சார்பாக ஊக்க பரிசுகள் வழங்கப்பட்டது.




மாநில மகளிரணி நிர்வாகிகள் மாநில தலைவருடன்....



ஈரோடு மாவட்ட குழுவினருடன் மாநில கௌரவ தலைவர் திரு.V.J.மோகன் சிங், மாநில தலைவர் Dr.G.பவானி சிங் மற்றும் மாநில பொது செயலாளர் திரு.J.பிரகாஷ் சிங்

## ஆடல்...பாடல்...பரவசம்...




சொந்தங்கள் பலர் நடனம், பாடல்கள் மூலம் தங்களின் திறமைகளை வெளிபடுத்தி பார்வையாளர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினார்கள்.







மாலை 4.45 மணியளவில்
மாநில மகளிரணி
அமைப்பாளர்
திருமதி.D.ருக்மணி பாய்
அவர்கள் நன்றிரை
நிகழ்த்தினார்கள்.



மாலை 5 மணிக்கு
தேசிய கீதம் இசைக்கப்பட்டு
**TNRBA 2025** குடும்ப விழா இனிதே
நிறைவு பெற்றது.

# நன்றிகளும், வாழ்த்துக்களும்

TNRBA செயற்குழு கூட்டத்தை மிக சிறப்பாக நடத்தி தந்த மாநில நிர்வாக குழு உறுப்பினர்களுக்கும், செயற்குழு உறுப்பினர்களுக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதுபோல மாவட்ட உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்து அவர்களை ஒருங்கிணைத்து பஸ், வேன், கார்கள், மூலமாகவும், இரயில் மற்றும் பஸ் மூலமாகவும் ஓசூர் அழைத்து வந்து குடும்ப விழாவில் பங்கு பெற செய்து நமது ஒற்றுமையை பறைசாற்றிய அனைத்து மாவட்ட தலைவர், செயலாளர் மற்றும் இதர நிர்வாகிகளுக்கு எங்கள் அன்பு மாலையை அணிவிக்கிறோம்.

கலை நிகழ்ச்சிகளை சிறப்பாக ஏற்பாடு செய்து, அதனை வெகு வெற்றிகரமாக நடத்தி சங்கத்தின் மகுடத்தில் வெற்றி முத்தை பதித்த மகளிரணி மாநில - மாவட்ட நிர்வாகிகளை எவ்வளவு வாழ்த்தினாலும் தகும். அவர்களின் செயல்திறன் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து பிரமிக்க வைக்கிறது. அவர்களுக்கு எங்கள் அடி மனதில் இருந்து வாழ்த்துக்களும், பாராட்டுதல்களும்.

மகளிரணிக்கு உறுதுணையாக இருப்பதுடன், விழா ஏற்பாடுகளில் முழு மூச்சுடன் ஈடுபட்டு, சங்கத்தின் எதிர்கால தூண்களாக நாங்கள் இருக்கிறோம் என தலைமை சங்கத்திற்கு பக்கபலமாக இருக்கும் மாநில - மாவட்ட இளைஞரணி நிர்வாகிகளுக்கு எங்கள் நெஞ்சில் நீங்கா இடம்.

தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கத்தின் ஆண்டு விழா, மற்றும் குடும்ப விழாவினை Dr.G.பவானி சிங் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி சிறு பிசிறும் இன்றி திட்டமிட்டு, உறவினர்களை இன்முகத்துடன் வரவேற்று, உபசரித்து, வெற்றிகரமாக நடத்தி நம் மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்களின் திருகரங்களில் சமர்பித்த கிருஷ்ணகிரி - ஓசூர் மாவட்ட நிர்வாகிகளுக்கு கோடானகோடி வணக்கங்கள்.

குடும்ப விழாவை வெற்றி விழாவாக உருவாக்க மாநில தலைவருக்கு உறுதுணையாக இருந்த ஓசூர் நிர்வாகிகள் திரு.ஜெய்குரு (T.பாலாஜி சிங்), திரு.M.அசோக் குமார் சிங், திரு.M.சசிகுமார் சிங், திரு.B.ஜெய் குமார் சிங் ஆகியோருக்கு சிறப்பு நன்றிகள்.

பவானிஸ் கிராண்ட் பேலஸ் அரங்கை விழாவுக்கு சிறந்த முறையில் தயார் செய்து, உணவு பறிமாற்றங்கள் உயரிய முறையில் உரிய நேரத்தில் செய்து சிறப்பான செயல்பாடுகளை எவ்வித ஆர்பாட்டங்களுமின்றி அமைதியாக செய்த திரு.B.பகவான் சிங் அவர்களுக்கு எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

விழா நிகழ்ச்சிகளை மாநில இளைஞரணி அமைப்பு செயலாளர் திரு.R.கார்த்திக் சிங் அவர்களும், கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் திரு.B.ஜெயகுமார் சிங் அவர்களும் மிக சிறந்த முறையில் தொகுத்து வழங்கினார்கள். அவர்களுடைய தொகுப்பு முறை நிகழ்ச்சிக்கு மேலும் மெருகேற்றியது. அவர்களுக்கு எங்களின் வாழ்த்துக்களும், பாராட்டுதல்களும்.

விழா நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து மிக விரைவான முறையில் அடுத்த நாளே கூகுள் டிரைவ் லிங்க் (Google Drive link) மூலம் பகிர்ந்த பவானி ஸ்டுடியோஸ் திரு.அர்ஜூன் அவர்களுக்கு எங்களின் வாழ்த்துக்களும், பாராட்டுதல்களும்.

குடும்ப விழா முடிந்ததுமே, கலை நிகழ்ச்சிகளின் வரவுசெலவு கணக்குகளை சரிபார்த்து அதனை தலைமை சங்கத்தின் பார்வைக்கு அனுப்பிய திரு.D.ருக்மணி பாய் அவர்களுக்கும், திரு.Aஅபிராமி பாய் அவர்களுக்கும் நன்றிகள்.

சங்கத்தின் வரவுசெலவு கணக்குகள் வெளிப்படையாக இருக்க கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு கிடைத்த நன்கொடை விபரங்களை தாமதிக்காமல் அனுப்பி வைத்து "TNRBA 2025 குடும்ப விழா நன்கொடையாளர்கள் மற்றும் ஸ்பான்சர்கள்" பற்றிய விபரங்களை புத்தக வடிவில் வெளியிட உதவிய மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்களுக்கு நன்றிகள்.

சமுதாய மக்களின் நலனுக்காக, தன்னுடைய நேரம், காலம், பார்க்காமல் சேவை செய்தல், இறுமாப்பு, ஏற்றதாழ்வுகள் இன்றி அனைவரிடமும் பழகும் குணம் கொண்ட எங்கள் சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவன், கொடைவள்ளல், மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்களை எப்படி பாராட்டுவது என்று தெரியவில்லை. அவரின்றி இராஜ்புத் பொந்தில் சமுதாயத்தில் ஓர் அணுவும் அசையாது.

தந்தையை போலவே சமுதாய நலனில் அக்கறை கொண்டு அவருக்கு பக்கபலமாக இருந்து வரும் திரு.B.பகவான் சிங் அவர்களுக்கும், திரு.B.பரத் சிங் அவர்களுக்கும் சமுதாய மக்களின் சார்பாக வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

Dr.G.பவானி சிங் அவர்கள் குடும்பத்தாருடன் பூரண நலத்துடன் நீடுழி வாழ வேண்டும், அவருடைய ஒப்பற்ற தலைமையின் கீழ் சமுதாயம் செழித்து ஓங்கி வளர வேண்டும் என பிரார்த்திக்கிறோம்.

அனைத்து சொந்தங்களுக்கும் இனிய சுதந்திர தின நல்வாழ்த்துகள்.





J.பிரகாஷ் சிங்
**TNRBA**
மாநில பொது செயலாளர்

15.08.2025